**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2022 - ம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 17 - ம் நாள், புதன்கிழமை.

**வ.வி.எண்.271/2018**

**இன்**

**அசல் வழக்கு எண்.65/2018**

சுரேஷ் தனக்காகவும்,

உடையார்விளை ஊர் சார்பாகவும்

பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார். ... மனுதாரர் / வாதி

/எதிர்/

**1.** புனித அன்னை தெரசா கத்தோலிக்க கிறிஸ்தவ
நற்பணி மன்றம், அதற்காக அதன் தலைவர் டேனியல்.

**2.** டேனியல், தலைவர். புனித அன்னை தெரசா கத்தோலிக்க கிறிஸ்தவ
நற்பணி மன்றம், உடையார்விளை.

**3.** பௌலாஸ் ராஜன், செயலாளர், புனித அன்னை தெரசா
கத்தோலிக்க கிறிஸ்தவ நற்பணி மன்றம், உடையார்விளை.

**4.** செயல் அலுவலர்,
கல்லுக்கூட்டம் பஞ்சாயத்து.

**5.** கிராம நிர்வாக அலுவலர்,
கல்லுக்கூட்டம்.

**6.** தாசில்தார்,

கல்குளம் தாலுகா.

**7.** வருவாய் கோட்ட அலுவலர்,

பத்மனாபபுரம்.

**8.** மாவட்ட ஆட்சியர்,

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில். ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது, 26.07.2022 அன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர். திரு. A. விமலன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஜஸ்டஸ் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 8 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய ஆட்சேபனையை தெரிவிக்கும் வண்ணம், எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால், அவர்கள் தோன்றா தரப்பினராக்கப்பட்டார்கள். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

**1.** இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 - ன் கீழ் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்கக் கோரி, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

\

மனுவின் சாரம்சப்படி, மனு சொத்தானது, புதிய சர்வே எண்.527/2012, தற்சமயம் கல்லுக்கூட்டம் கிராமத்தில் அமைந்திருப்பதாகவும், மேற்சொன்ன, கல்லுக்கூட்டம்

பஞ்சாயத்திற்கு உட்பட்டுள்ளதாகவும், தாவா சொத்தில், பழைய கட்டிட கதவு இலக்க எண்.4-135B6 என்ற எண்ணுடன் கூடிய ஒரு கட்டிடம் இருந்ததாகவும், கடந்த ஆகஸ்ட் 2018 - ம் வருடம் 2 மற்றும் 3 பிரதிவாதிகள், அனுமதி ஏதுமின்றி ஒரு கட்டிடம் கட்டி விட்டதாகவும், அதற்கு தேவாலயம் அனுமதி வழங்கவில்லை என்று மனுவாதி தெரிவிக்கிறார்.

**3.** தாவா சொத்தை, இந்து, இஸ்லாம், சி.எஸ்.ஐ. கிறிஸ்தவர்கள் உடையார்விளை சி.எஸ்.ஐ. சர்ச் பின்பற்றுபவர்களாக உள்ளார்கள் என்றும், அதற்காக செம்மாங்குளம் இசக்கி அம்மன் கோவில் உள்ளது என்றும், அதன் அருகே புதிதாக கட்டப்பட்டுள்ள தேவாலயம் உள்ளது என்றும், நாளது தேதிவரை அனைத்து மதத்தவரும் சமூக நல்லொழுக்கத்துடன் இருந்து வருவதாகவும், புதிதாக ஒரு தேவாலயம் கட்டி, அங்கு அமைதியற்ற ஒரு சூழ்நிலையை எதிர்மனுவாதிகள் ஏற்படுத்தி விட்டார்கள் என்றும், இவ்வாறு செய்தது குறித்து, இந்த வழக்கில் தெளிவுற எடுத்துரைக்க வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமென்று மனுவாதி கோருகிறார்.

**4.** எதிர்மனுதாரர்கள், இந்த மனுவில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** **<u>மனுவாதி தரப்பில் கேட்கப்பட்டது</u> :**

வழக்கில் உருவான, ஒரு சர்ச் கட்டிடம் இருப்பதால், அது குறித்து, இந்த நீதிமன்றத்திற்கு முழு விபரங்கள் அறிய வேண்டுமென்ற நோக்கில், இந்த நீதிமன்றம், நீதியின்பால் இந்த மனுவினை அனுமதிக்கின்றது.

**6.** **<u>முடிவு</u> :**

வழக்கறிஞர் திரு. வினிபிறட் போஸ் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்படுகிறார். வழக்கறிஞர் ஆணையர், ஆணையை பெற்றுக் கொண்டு, தாவா சொத்தை பார்வையிடுவதற்கு முன்பாக, அனைத்து தரப்பினர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து, இரு தரப்பினர்களின்

முன்னிலையில் பார்வையிட்டு, களநிலவரத்தை குறிப்பெடுத்து கொண்டு, தாவா சொத்தினை தகுதி பெற்ற ஒரு கள அளவையரின் உதவியோடு அளந்து, வரைபடம் தயாரித்து, தாவா சொத்துக்களைக் குறித்து புகைப்படம் மற்றும் வரைபடம் ஆகியவைகளையும் கூட்டி முழுமையான ஒரு அறிக்கை தாக்கல் செய்ய பணிக்கப்படுகிறார். வழக்கறிஞர் ஆணையர் கட்டணமாக ரூ.7,000/- நிர்ணயிக்கப்படுகிறது. இந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் கட்டணத்தை வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022 - ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

மா.உ.நீ, இரணியல்.
**வரைவு/ சீரான உத்தரவு**
வ.வி.எண்.271/2018
இன்
அசல் வழக்கு எண்.65/2018
தேதி 17.08.2022